# நன்றியுரை

ஏக இறைவனுக்கே! புகழ் அனைத்தும். அகிலம் அனைத்தையும் படைத்துக் காத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவனுக்கு முதற்கண் என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

“திருக்குர்ஆனில் சமூக நீதி” என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பினை நல்கி நேரம், காலம் பாராமல் இடம், பொருள் எனக்கருதாமல் ஆய்வு குறித்த அனைத்து வழிகளிலும் என்னை நெறிப்படுத்தி உரிய நேரத்தில் ஆய்வேட்டைச் சமர்ப்பிப்பதற்கு என்னைச் செப்பம் செய்த நெறியாளர் பேராசிரியர் முனைவர் உ. அலிபாவா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கும் முனைவர் பட்ட வல்லுநர் குழு உறுப்பினராக இருந்து வழிகாட்டிய ஜமால் முகம்மது கல்லூரி தமிழாய்வுத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் மீ.அ.ச. ஹபீபுர்ரஹ்மான் அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் பீ. கா. நபிசாள் பீவி அவர்களுக்கும் என்றென்றும் நன்றியுடையேன்.

தமிழியல்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் பா. மதிவாணன் அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் ஜெ. சந்திரகலா அவர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இவ்ஆய்வு மேற்கொண்டதிலிருந்து உடன் இருந்து தேவையான புத்தங்களையும் கருத்துகளையும் வழங்கி மேலும் இம்முனைவர் பட்ட ஆய்வு முழுமை பெற முழு உதவி புரிந்து என்னுடன் அயராது உழைத்த என் தோழர்களான பேராசிரியர்கள் முனைவர் ரா. ராஜராஜன், முனைவர் ம. சந்திரசேகர், முனைவர் க. இராஜா ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வுக்குத் தேவையான பல உதவிகளைப் புரிந்த மரியாதைக்கும் பாசத்திற்குமுரிய திருமதி. எம். ஜெயிலானி மற்றும் அப்ரோஸ் பசீர் அவர்களுக்கும், மேலும் என் அன்புத் தோழர்கள் சே. மல்க்கர்ஒலி, அ.

இம்ரான்கான், காஜாமியான் பள்ளி ஆசிரியர் மு. முகம்மது பிர்தௌஸ் அவர்களுக்கும் என் அன்பு நன்றி.

இம்மண்ணுலகினை அறிய என்னை ஈன்றெடுத்து ஈடுசெய்தற்கரிய கல்வியை நான் பெறுவதற்குத் தங்களின் உழைப்பையும் வியர்வையையும் செலவழித்துக் கொண்டிருக்கும் எனது தாய் தந்தையருக்கும் எனது உடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் என் சிந்தனையைக் கல்வியின் பக்கம் செலுத்த வைத்து என்னை முனைவராக்கிக் காண விழையும் மச்சான் M. I. காஜா மொய்தீன் அவர்களுக்கும் மேலும் எனக்குத் தேவையான புத்தகங்களைக் கொடுத்து என் ஆர்வத்தை அதிகப்படுத்திய மச்சான் G. ஷாகுல் ஹமீது அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

K. M. K. பூக்கடையில் என்னுடன் பணியாற்றிய சக ஊழியர்களுக்கும் நண்பர்களுக்கும் மேலும் எனது ஊர் நண்பர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(சே. அமீருதீன்)